Government of **Western Australia**
**School Curriculum and Standards Authority**

# TAMIL: SECOND LANGUAGE

## ATAR course sample examination

## Recording transcript

2024/61440

Copyright © School Curriculum and Standards Authority 2024

This is the ATAR course examination in Tamil: Second Language, Section One: Listening and Responding.

Turn to page 3 of your Question/Answer booklet and follow the transcript while listening.

This section has **13** questions. Answer all questions in **English** in the spaces provided.

You will hear **three** texts in Tamil.

Text 1 and 2 will be played twice.

Text 3 is divided into **two** parts. It will be played once in its entirety, then each part will be played twice.

There will be a short pause between the first and second readings. After the second reading, there will be time to answer the questions.

You may make notes at any time. Your notes will not be marked. You may come back to this section at any time during the working time for this paper.

Suggested working time: 30 minutes.

Listen to the short text that is printed below. This will help you to become accustomed to the speakers' voices. There are no questions or marks associated with this text.

A: வணக்கம் செழியன்

B: வணக்கம் பல்லவி

A: நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

B: நான் மிகவும் நன்றாக இருக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

A: நானும் நலமாக இருக்கிறேன். இன்று என்ன தலைப்பைப் பற்றிக் கற்கவுள்ளோம்

B: மரம் நடுகையின் அவசியம் பற்றி ஆசிரியர் கற்பிக்கவுள்ளதாக கூறினார்.

A: அப்படியா! நாமெல்லோரும் மரங்களை நடுவதால் அதிவேகமாக அதிகரித்துச் செல்லும் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த முடியுமல்லவா?

B: நிச்சயமாக.

Turn over page and begin Section One

**Text 1: Speech transcript**

**First reading**

Listen to this speech and answer Questions 1 to 5.

வணக்கம் பேர்த் (Perth) வாழ் மக்களே!

நான் உங்கள் மதுரன். மலரவுள்ள தமிழ் வருடப்பிறப்புடன் உங்கள் பொழுதை இனிமையாக கழிக்க உங்களுக்கு ஆவலா? பேர்த் (Perth) தமிழ்ச் சங்கம் வரும் ஏப்ரல் மாதம் 11 முதல் 13 வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு 'சித்திரைத் திருவிழா' நிகழ்ச்சியை வழங்கவுள்ளார்கள். முதல் நாளன்று புகழ் பெற்ற சிறந்த பாடகர்கள் பிரபல பாடல்களை வழங்கி, உங்களை இசை மழையில் மகிழ்விக்கவுள்ளார்கள். இந்நிகழ்ச்சிக்கு இசை வழங்கவுள்ளார் உங்கள் அபிமான இசையமைப்பாளர் சாரங்கன். இரண்டாம் நாள் சிறுவர்களும் இளைஞர்களும் வழங்கும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பதுடன், மூன்றாம் நாள் சிறுவர் முதல் பெரியோர் வரை பங்கேற்கும் தமிழரின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு சித்திரைத் திருவிழாவைக் கொண்டாடி மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும். தமிழ்ச் சங்க வலைத்தளத்தில் அனுமதிச்சீட்டுகளை பெற்றுக் கொள்ளும் முதல் பத்து பார்வையாளருக்கு அனுமதி இலவசம். இந்நிகழ்ச்சியில் பங்குபற்றும் போது தெரிவு செய்யப்படும் இருபது நபர்களுக்கு உங்கள் அபிமான பாடகர்களுடன் பேர்த் (Perth) மாநகர்ச் சுற்றுலாவிற் கலந்து கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

*(30 seconds silence)*

**Text 1: Speech transcript**

**Second reading**

வணக்கம் பேர்த் (Perth) வாழ் மக்களே!

நான் உங்கள் மதுரன். மலரவுள்ள தமிழ் வருடப்பிறப்புடன் உங்கள் பொழுதை இனிமையாக கழிக்க உங்களுக்கு ஆவலா? பேர்த் (Perth) தமிழ்ச் சங்கம் வரும் ஏப்ரல் மாதம் 11 முதல் 13 வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு 'சித்திரைத் திருவிழா' நிகழ்ச்சியை வழங்கவுள்ளார்கள். முதல் நாளன்று புகழ் பெற்ற சிறந்த பாடகர்கள் பிரபல பாடல்களை வழங்கி, உங்களை இசை மழையில் மகிழ்விக்கவுள்ளார்கள். இந்நிகழ்ச்சிக்கு இசை வழங்கவுள்ளார் உங்கள் அபிமான இசையமைப்பாளர் சாரங்கன். இரண்டாம் நாள் சிறுவர்களும் இளைஞர்களும் வழங்கும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பதுடன், மூன்றாம் நாள் சிறுவர் முதல் பெரியோர் வரை பங்கேற்கும் தமிழரின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு சித்திரைத் திருவிழாவைக் கொண்டாடி மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும். தமிழ்ச் சங்க வலைத்தளத்தில் அனுமதிச்சீட்டுகளை பெற்றுக் கொள்ளும் முதல் பத்து பார்வையாளருக்கு அனுமதி இலவசம். இந்நிகழ்ச்சியில் பங்குபற்றும் போது தெரிவு செய்யப்படும் இருபது நபர்களுக்கு உங்கள் அபிமான பாடகர்களுடன் பேர்த் (Perth) மாநகர்ச் சுற்றுலாவிற் கலந்து கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

---

Now answer Questions 1 to 5.

*(90 seconds silence)*

**Text 2: Advertisement**

**First reading**

Listen to this advertisement and answer Questions 6 to 9.

இலங்கையில் (In Sri Lanka) திருகோணமலை (Trincomalee) மாவட்டத்தில் உள்ள கன்னியா (Kanniya) வெந்நீர் ஊற்றை உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம். இவ்வெந்நீர் ஊற்று திருகோணமலை (Trincomalee) நகரிலிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இங்கு ஏழு வெந்நீர் ஊற்று இருக்கிறது. இது இலங்கையின் (Sri Lanka's) பிரபல்யமான சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகும். வருடந்தோறும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகள் வந்து பார்வையிடும் புகழ்பெற்ற முக்கிய இடமாக இது விளங்குகின்றது. தமிழ் மன்னன் இராவணனுக்கும் இவ்வெந்நீர் ஊற்றுக்கும் தொடர்புகள் இருப்பதாக வரலாறு கூறுவதால், தமிழர்கள் இவ்விடத்தைப் புனிதமாக பேணிப் பாதுகாத்து வருகிறார்கள். வெவ்வேறு வெப்பநிலைகளில் ஒவ்வொரு ஊற்றிலும் நீர் இருப்பதும், அள்ளஅள்ள நீர் வற்றாமல் இருப்பதும் இவ்வெந்நீர் ஊற்றுக்களின் சிறப்பம்சங்களாகும். இவ்விடத்தைப் பார்வையிட வரும் போது இம்மாவட்டத்தின் எழில்மிகு பிரசித்தி பெற்ற இடங்கள், அழகிய கடற்கரைகள், மக்களின் கலைப்படைப்புகள் போன்றவற்றைக் கண்டு களிப்பதுடன் இந்த இடத்திற்கே உரித்தான உருசியான உணவு வகைகளையும் தவறாமல் சுவைத்துச் செல்லுங்கள். இன்றே உங்கள் விடுமுறையைத் திட்டமிடுங்கள்! கன்னியா வெந்நீர் ஊற்றின் சிறப்பினை அனுபவித்துச் செல்லுங்கள்!

*(30 seconds silence)*

## Text 2: Advertisement

**Second reading**

இலங்கையில் (In Sri Lanka) திருகோணமலை (Trincomalee) மாவட்டத்தில் உள்ள கன்னியா (Kanniya) வெந்நீர் ஊற்றை உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம். இவ்வெந்நீர் ஊற்று திருகோணமலை (Trincomalee) நகரிலிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இங்கு ஏழு வெந்நீர் ஊற்று இருக்கிறது. இது இலங்கையின் (Sri Lanka's) பிரபல்யமான சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகும். வருடந்தோறும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகள் வந்து பார்வையிடும் புகழ்பெற்ற முக்கிய இடமாக இது விளங்குகின்றது. தமிழ் மன்னன் இராவணனுக்கும் இவ்வெந்நீர் ஊற்றுக்கும் தொடர்புகள் இருப்பதாக வரலாறு கூறுவதால், தமிழர்கள் இவ்விடத்தைப் புனிதமாக பேணிப் பாதுகாத்து வருகிறார்கள். வெவ்வேறு வெப்பநிலைகளில் ஒவ்வொரு ஊற்றிலும் நீர் இருப்பதும், அள்ளஅள்ள நீர் வற்றாமல் இருப்பதும் இவ்வெந்நீர் ஊற்றுக்களின் சிறப்பம்சங்களாகும். இவ்விடத்தைப் பார்வையிட வரும் போது இம்மாவட்டத்தின் எழில்மிகு பிரசித்தி பெற்ற இடங்கள், அழகிய கடற்கரைகள், மக்களின் கலைப்படைப்புகள் போன்றவற்றைக் கண்டு களிப்பதுடன் இந்த இடத்திற்கே உரித்தான உருசியான உணவு வகைகளையும் தவறாமல் சுவைத்துச் செல்லுங்கள். இன்றே உங்கள் விடுமுறையைத் திட்டமிடுங்கள்! கன்னியா வெந்நீர் ஊற்றின் சிறப்பினை அனுபவித்துச் செல்லுங்கள்!

---

Now answer Questions 6 to 9.

*(90 seconds silence)*

**Text 3: Conversation**

**Reading in its entirety**

Listen to this conversation and answer Questions 10 to 13.

கண்மணி: அப்பா! கையில் என்ன வைத்திருக்கிறீர்கள்?

அப்பா: கண்மணி, இது தமிழ்நாட்டு (Tamil Nadu's) வனத்துறையிடமிருந்து வந்த அறிவிப்பு. நமது மாவட்டத்தில் காடுகள் வளர்க்க, விதைப்பந்து வீசப்போவதாகவும் அதற்குத் தன்னார்வலர்கள் வேண்டுமெனவும் இதில் கோரிக்கை வைத்துள்ளனர்.

கண்மணி: அப்பா, விதைப்பந்து என்றால் என்ன? விதைப்பந்து வீசினால் எப்படி காடுகள் உருவாகும்?

அப்பா: விதைப்பந்தானது களிமண், உரக்கலவை, காகிதக்கூழ் மற்றும் விதைகள் கலந்து உருட்டி உருவாக்கப்படுகிறது. நன்கு காய்ந்த விதைப்பந்துகளை பருவமழைக் காலங்களில் மரங்கள் தேவையான பகுதிகளில் வீசி எறிவர். அவை வீழும் இடங்களில் முளைத்து வளரும்.

கண்மணி: அப்பா, பெருமழை பெய்து வெள்ளம் ஏற்பட்டால் வீசிய விதைப்பந்துகளுக்குப் பாதிப்பு வராதா?

அப்பா: இல்லை கண்மணி. நன்கு காய்ந்த விதைப்பந்துகள் வெள்ளத்தில் மிதந்து செல்லும். வெள்ளநீர் வடிந்ததும் விதைப்பந்தினுள் இருக்கும் விதைகள் முளைக்கும். இதுமட்டுமல்ல விதைப்பந்தினுள் இருக்கும் ஈரம், விதைகளை வறட்சியில் இருந்து பாதுகாக்கிறது.

கண்மணி: இது நல்லதோர் முயற்சி. இந்நிகழ்ச்சியில் பங்கேற்க நாம் எப்படி பதிவு செய்வது அப்பா?

அப்பா: இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 999491234 என்ற தொலைபேசி எண்ணையோ அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள விரைவுக் குறியீட்டையோ கொண்டு பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்கள். நாமும் இந்த நிகழ்ச்சிக்குச் செல்வோமா கண்மணி?

கண்மணி: ஆம் அப்பா. எனக்கு இந்நிகழ்ச்சியில் பங்கேற்க மிகவும் ஆர்வமாக உள்ளது. நாம் அனைவரும் நிச்சயமாக செல்லலாம் அப்பா.

*(30 seconds silence)*

**Text 3: Part (i)**

**First reading**

கண்மணி: அப்பா! கையில் என்ன வைத்திருக்கிறீர்கள்?

அப்பா: கண்மணி, இது தமிழ்நாட்டு (Tamil Nadu's) வனத்துறையிடமிருந்து வந்த அறிக்கை. நமது மாவட்டத்தில் காடுகள் வளர்க்க, விதைப்பந்து வீசப்போவதாகவும் அதற்குத் தன்னார்வலர்கள் வேண்டுமெனவும் இதில் கோரிக்கை வைத்துள்ளனர்.

கண்மணி: அப்பா, விதைப்பந்து என்றால் என்ன? விதைப்பந்து வீசினால் எப்படி காடுகள் உருவாகும்?

அப்பா: விதைப்பந்தானது களிமண், உரக்கலவை, காகிதக்கூழ் மற்றும் விதைகள் கலந்து உருட்டி உருவாக்கப்படுகிறது. நன்கு காய்ந்த விதைப்பந்துகளை பருவமழைக் காலங்களில் மரங்கள் தேவையான பகுதிகளில் வீசி எறிவர். அவை வீழும் இடங்களில் முளைத்து வளரும்.

(*30 seconds silence)*

**Text 3: Part (i)**

**Second reading**

கண்மணி: அப்பா! கையில் என்ன வைத்திருக்கிறீர்கள்?

அப்பா: கண்மணி, இது தமிழ்நாட்டு (Tamil Nadu's) வனத்துறையிடமிருந்து வந்த அறிக்கை. நமது மாவட்டத்தில் காடுகள் வளர்க்க, விதைப்பந்து வீசப்போவதாகவும் அதற்குத் தன்னார்வலர்கள் வேண்டுமெனவும் இதில் கோரிக்கை வைத்துள்ளனர்.

கண்மணி: அப்பா, விதைப்பந்து என்றால் என்ன? விதைப்பந்து வீசினால் எப்படி காடுகள் உருவாகும்?

அப்பா: விதைப்பந்தானது களிமண், உரக்கலவை, காகிதக்கூழ் மற்றும் விதைகள் கலந்து உருட்டி உருவாக்கப்படுகிறது. நன்கு காய்ந்த விதைப்பந்துகளை பருவமழைக் காலங்களில் மரங்கள் தேவையான பகுதிகளில் வீசி எறிவர். அவை வீழும் இடங்களில் முளைத்து வளரும்.

---

Now answer Questions 10 and 11.

*(90 seconds silence)*

**Text 3: Part (ii)**

**First reading**

கண்மணி: அப்பா, பெருமழை பெய்து வெள்ளம் ஏற்பட்டால் வீசிய விதைப்பந்துகளுக்குப் பாதிப்பு வராதா?

அப்பா: இல்லை கண்மணி. நன்கு காய்ந்த விதைப்பந்துகள் வெள்ளத்தில் மிதந்து செல்லும். வெள்ளநீர் வடிந்ததும் விதைப்பந்தினுள் இருக்கும் விதைகள் முளைக்கும். இதுமட்டுமல்ல விதைப்பந்தினுள் இருக்கும் ஈரம், விதைகளை வறட்சியில் இருந்து பாதுகாக்கிறது.

கண்மணி: இது நல்லதோர் முயற்சி. இந்நிகழ்ச்சியில் பங்கேற்க நாம் எப்படி பதிவு செய்வது அப்பா?

அப்பா: இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 999491234 என்ற தொலைபேசி எண்ணையோ அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள விரைவுக் குறியீட்டையோ கொண்டு பதிவுசெய்து கொள்ளுமாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். நாமும் இந்த நிகழ்ச்சிக்குச் செல்வோமா கண்மணி?

கண்மணி: ஆம் அப்பா. எனக்கு இந்நிகழ்ச்சியில் பங்கேற்க மிகவும் ஆர்வமாக உள்ளது. நாம் அனைவரும் நிச்சயமாக செல்லலாம் அப்பா.

(*30 seconds silence)*

**Text 3: Part (ii)**

**Second reading**

கண்மணி: அப்பா, பெருமழை பெய்து வெள்ளம் ஏற்பட்டால் வீசிய விதைப்பந்துகளுக்குப் பாதிப்பு வராதா?

அப்பா: இல்லை கண்மணி. நன்கு காய்ந்த விதைப்பந்துகள் வெள்ளத்தில் மிதந்து செல்லும். வெள்ளநீர் வடிந்ததும் விதைப்பந்தினுள் இருக்கும் விதைகள் முளைக்கும். இதுமட்டுமல்ல விதைப்பந்தினுள் இருக்கும் ஈரம், விதைகளை வறட்சியில் இருந்து பாதுகாக்கிறது.

கண்மணி: இது நல்லதோர் முயற்சி. இந்நிகழ்ச்சியில் பங்கேற்க நாம் எப்படி பதிவு செய்வது அப்பா?

அப்பா: இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 999491234 என்ற தொலைபேசி எண்ணையோ அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள விரைவுக் குறியீட்டையோ கொண்டு பதிவுசெய்து கொள்ளுமாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். நாமும் இந்த நிகழ்ச்சிக்குச் செல்வோமா கண்மணி?

கண்மணி: ஆம் அப்பா. எனக்கு இந்நிகழ்ச்சியில் பங்கேற்க மிகவும் ஆர்வமாக உள்ளது. நாம் அனைவரும் நிச்சயமாக செல்லலாம் அப்பா.

---

Now answer Questions 12 and 13.

(*90 seconds silence*)

This is the end of Section One.
Complete your answers and continue with the rest of the paper.

The sound equipment can now be turned off.

**Copyright**
© School Curriculum and Standards Authority, 2024

This document – apart from any third-party copyright material contained in it – may be freely copied, or communicated on an intranet, for non-commercial purposes in educational institutions, provided that it is not changed and that the School Curriculum and Standards Authority (the Authority) is acknowledged as the copyright owner, and that the Authority's moral rights are not infringed.

Copying or communication for any other purpose can be done only within the terms of the *Copyright Act 1968* or with prior written permission of the Authority. Copying or communication of any third-party copyright material can be done only within the terms of the *Copyright Act 1968* or with permission of the copyright owners.

Any content in this document that has been derived from the Australian Curriculum may be used under the terms of the Creative Commons Attribution 4.0 International (CC BY) licence.

An *Acknowledgements variation* document is available on the Authority website.

*Published by the School Curriculum and Standards Authority of Western Australia*
*303 Sevenoaks Street*
*CANNINGTON WA 6107*